بسم الله الرحمن الرحيم

**அல் கலம் சர்வதேச கல்விக்கூடம் CBSE பெருங்குளம்**

# கல்வி விழிப்புணர்வு இரண்டாம் மாநாடு

மாண்புமிகு



## ஷேய்க். அப்துல் குத்தூஸ் அஸ்ஹாரி

ஆஸ்ட்ரேலியாவின் தலைமை முப்தி அவர்கள் ஆற்றிய

# “சிந்தனை எழுச்சியுறை”

**நாள்: 30.12.2023 (சனிக்கிழமை)**

**இடம்: அல் கலம் பள்ளி, பெருங்குளம்.**

بسم الله الرحمن الرحيم

**الحمد لله وحده والصلاة والسلام على من لا نبي بعده، وعلى آله الشرفاء وأصحابه الشهراء أما بعد**

எல்லாப் புகழும் ஏக இறைவனாம் அல்லாஹ்வுக்கே உரித்தாகும். அகிலத்தின் அருள்கொடை, அனைத்து துறைகளின் அழகிய முன்மாதிரி அண்ணல் முகமது (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மீதும் அவர்களின் அறிவார்ந்த, அர்த்தமுள்ள வாழ்க்கையை, இறை நம்பிக்கையை, நல்லறச் செயல்களில் வழி இனிதாய் பின்பற்றி வாழ்ந்த, வாழ்கின்ற, அனைவர் மீதும் அல்லாஹ்வின் அன்பும், அருளும், சாந்தியும், சமாதானமும் இடைவிடாது பொலியட்டுமாக!

***பேரன்பு மிக்க பெருமக்களே! அறிவு ஜீவிகளே! மார்க்க அக்கறை,சமூக அக்கறை, நிறைந்த சமுதாயத் தலைவர்களை சன்மார்க்க அறிஞர்களே! சகோதர சகோதரிகளே! சிறப்பு விருந்தினர்களே! சகல ஊர்களின் ஜமாத்தினர்களே! ஆசிரியர்களே! மாணவர்களே!***

***"அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரக்காத்துஹு"***

**السَّلامُ عَلَيْكُم ورَحْمَةُ اللهِ وَبَرَكاتُهُ**

வரலாற்றுச் சிறப்புமிக்க இக் கல்வி கருத்தரங்கில் உங்கள் அனைவரையும் ஒருசேரச்சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்த அரிய வாய்ப்பை அமைத்து தந்த அருளாளன் அல்லாஹ்வையே! இதயபூர்வமாய் போற்றி! நன்றி செலுத்துகிறேன்.

**كُنْتُمْ خَيْرَ أُمَّةٍ أُخْرِجَتْ لِلنَّاسِ**

***"மனிதர்களின் நேர்வழிக்காக வெளிப்படுத்தப்பட்ட மக்களில் நீங்களே! மிகச் சிறந்தச் சமுதாயத்தினர்"*** இது அழியாப் புகழ் பெற்ற இறைவேதம் அல்குர்ஆனில் இடம் பெற்றுள்ள அல்லாஹ்வின் அறிவிப்பு. அண்ணல் நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உம்மத்துக்காகக் கிடைத்துள்ள அழகியப் புகழாரம் இச்சிறப்பிற்க்கான காரணம் நன்மையை ஏவுதலும், தீமையைத் தடுத்தலும் எல்லா நிலையிலும், நேரங்களிலும் அல்லாஹ்வின் மீது அசைக்க முடியாத நம்பிக்கை வைத்து செயலாற்றுவதுமாகும்.

تَأْمُرُونَ بِالْمَعْرُوفِ وَتَنْهَوْنَ عَنِ الْمُنْكَرِ وَتُؤْمِنُونَ بِاللّٰهِ

சிறந்த சமுதாயத்தின் முதல் அடையாளம் கல்வி சார்ந்த, அறிவார்ந்த ஆராய்ச்சி மிக்க சமுதாயமாகும். இவற்றின் முக்கியத்துவம் திருக்குர்ஆனின் முதலாவதாக இறங்கிய ஆரம்ப வசனங்களின் இக்ரஃ (اِقْرَاْ) தொடரில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அல்லாஹ்வின் மார்க்கமாம் இஸ்லாத்தின் கல்வியும், அறிவும் அதிகமாக வலியுறுத்தப்பட்டுள்ளது. குர்ஆனும் ஹதீஸும் அதிகமாய் பேசுகின்றன.

ஸஹாபாக்களும், சமுதாய முன்னோடிகளும் தங்களின் எண்ணம் லட்சியம் பயணம் அனைத்தையும் கல்விக்காகவும், அறிவுத் தேடலுக்காகவும், அறிவின் பரவலுக்காகவும் அர்ப்பணித்து பொற்கால வரலாற்றைப் பதிவுச் செய்திருக்கின்றார்கள்.

கிபி 7 முதல் 13 ஆம் நூற்றாண்டு வரை அன்றைய உலகை இஸ்லாமிய விஞ்ஞானம் குர்ஆனிய அறிவியல் தான் ஆட்சி செய்தது. இன்றைய நவீன விஞ்ஞான வளர்ச்சியில் முன்னோடிகள் அன்றைய முஸ்லிம்களே! என்பதை எவரும் மறுத்திட முடியாது. ஆனால் இன்றைய நம்மவர்களின் பலர் இதனை அறியாதிப்பதும் ஆர்வம் காட்டாதிருப்பதும் மிகுந்த வருத்தத்திற்குரியதாகும்.

**“எந்த ஒரு சமுதாயமும் தனது கடந்தக் கால வரலாற்றை அறிந்து நிகழ்காலத்தைச் சீர் செய்து கொள்ளவில்லையோ! அந்த சமுதாயத்திற்கு எதிர்காலமே இல்லை” என்றார் வரலாற்றுப் பெரும் மேதை இப்னுகல்தூன்.**

ஆம், நமது கடந்த காலம் பொற்காலம், நபியும் அவர்களின் தோழர்களும் வரலாறுப் படைத்த காலம். பின்னர் இடையே வந்துச் சென்றக் காலமும் காலத்தினரும் வெற்றியும், தோல்வியும், இழப்பும் மாறி மாறி வந்த காலம். ஆனால் இன்றைய நமது தலைமுறையினரும் தலைவர்களும் நமது வரலாற்று முத்திரைக் காலத்தைப் பெரும்பாலும் நினைத்துப் பார்ப்பது இல்லை என்பது தான் கசப்பான உண்மை.

***சமுதாயத்தின் மிக முக்கியமான அங்கங்களில் நான்கு அங்கங்கள் உள்ளன. அதில்,***

## ➢ சமுதாயத்தின் முதலாவது அங்கம் – சிறுவர் , சிறுமியர்

இவர்கள் நர்சரி- நாற்றுப் பண்ணையைப் போன்றவர்கள். வேளாண்மை, விவசாயம் நல்ல மகசூலின் அடிப்படையே நல்ல நாற்றுகள்தான். நாற்றுக்களை நல்ல வீரியத்துடன் பராமரித்து வளர்ப்பது பொறுப்புள்ள விவசாயிகளின் கடமையாகும். உமராக்கள் எனும் தலைவர்களையும், உலமாக்கள் எனும் மார்க்க அறிஞர்களும் , ஆசிரியர்களும், பெற்றோர்களும் சமுதாய விவசாயிகளாவார். இவர்கள் அனைவரும் நல்ல சிரத்தைப் பொறுப்பு, கவனம், கவலை, இலட்சியத்தை அடையும். உறுதியுடன் ஒன்றிணைந்து செயல்பட்டால் அல்லாஹ்வின் உதவியால் சிறந்த சமுதாயத்திற்கான வலுவான அடித்தளத்தை அமைக்கலாம்.

பிள்ளைகளைப் பராமரித்து பயிற்றுவித்து, பயிற்சி அளிக்கும் விஷயத்தில் இஸ்லாம் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும் என்று அறிவுறுத்துகிறது. வளரும் பிள்ளைகள்தான் ஒரு சமுதாயத்தின் அடிப்படை, **“அழகிய அர்த்தமுள்ள பெயரிடுவதும் கல்வி ஒழுக்கப் பண்பாடு மார்க்க உணர்வை ஊட்டி வளர்ப்பதும் பிள்ளைகளுக்கு பெற்றோர் செய்ய வேண்டிய ஆரம்பக் கடமைகள் ஆகும்”** என்பது நபிமொழி. ஒரு தந்தை தன் பிள்ளைக்கு வழங்கும் அன்பளிப்புகளின் பயனுள்ள கல்வியும், நல்லொழுக்க நற்பண்புகளை புகட்டுவதுதான் மிகச்சிறந்த அன்பளிப்பு வேறில்லை என்றார்கள் வள்ளல் நபிகளார்.

## ➢ சமுதாயத்தின் இரண்டாவது அங்கம் – இளைஞர்கள்

இளைஞர்கள் - யுவாதிகள் ஆவார்கள். இவர்கள் சமுகத்தின் மிக முக்கிய அங்கம் ஆவார்.

இளையோர்களே, இளைஞர்களாகவும் பரிணாமம் பெறுகின்றனர், வளர்ந்து வருகின்றனர். ஆதலால் தான் பிள்ளைகளின் வளர்ப்பில் பெரிதும் அக்கறை காட்ட வேண்டும். பல பெற்றோர்கள் அளவுக்கு அதிகமாக செல்லம் - சலுகை தந்து ஏனோ தானோ என வளர்த்து வருகின்றனர். தந்தை உழைக்க, பொருளீட்ட வெளியில் செல்வார். அவரைக் காட்டிலும் பெற்றத் தாய்க்கு பிள்ளைகளை வளர்ப்பதில் பெரும் பொறுப்பு இருக்கின்றது.

அடிப்படை கல்வியை மட்டுமல்ல உயர்தர பட்டப் படிப்புக்கானக் கல்வியும் நமது இளைஞர்கள் கற்க வேண்டும். கற்பதற்கான வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும். இன்று இளைஞர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் என்னென்ன என்பதை சமூக அக்கறையையாளர்கள் அந்தந்த ஜமாத்தகளில் ஆற அமர்ந்து பேசி அவற்றை சிந்திக்க வேண்டும். முன்பெல்லாம் கிராமங்கள் பாதுகாப்பானதாகவும் கட்டுப்பாடு மிக்கதாகவும் இருந்தன. ஆனால் இன்று நிலைமை மாறிவிட்டது. மது, சூது, சினிமா, இசை மற்றும் வீண் அரட்டை போன்றவற்றில் நமது இளைஞர்கள் பலர் மாறிவிட்டனர், அடிமையாகி விட்டனர். அல்லாஹ்வின் அருளால், பெற்றோர்களின் வளர்ப்பு மார்க்கப் பண்பாட்டால் இன்னும் சில நல்ல இளைஞர்கள் இருந்து வருகின்றனர்.

ஒரு காலத்தில் பெரியவர்கள் பெற்றோர்கள் பேச்சை மதிப்பவர்களாக அவர்களுக்கு மரியாதை செய்து பணிவுடன் நடந்து கொள்பவர்களாக பல இளைஞர்களை பார்க்க முடிந்தது. இன்று பல ஊர்களின் நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. அல்லாஹ்வே தான் இந்த சமுதாயத்தைப் பாதுகாக்க வேண்டும். இன்றைய இளைஞர்கள், நாளைய தலைவர்கள், வழிகாட்டிகள். இளைஞர் என்பவன் சராசரியாக ஒரு ஒரு தனி மனிதன் அல்ல. அவன் ஒரு சக்தி வாய்ந்த இயக்கம். உலக கல்வி, மார்க்க கல்வி என்றெல்லாம் கல்வியை இஸ்லாம் ஒருபோதும் பிரிக்கவில்லை.

### علم النافع

**பயனுள்ள கல்வி, பயன்படா கல்வி** என்றுதான் இஸ்லாம் அறிவித்தது. கல்விதான் நமது அடையாளம். கல்வி கற்காதச்

சமுதாயம் தனது அடையாளத்தை இழந்து விடுகிறது. நமது மதிப்பை தொலைத்து விடுகிறது. மார்க்கம், பொருளாதாரம், பண்பு மருத்துவர், பொறியாளர், வழக்கறிஞர் மற்றும் ஆசிரியர் இன்னும் கல்வியில் எத்தனைத் துறைகள் இருக்கின்றனவோ, அத்தனைத் துறைகளிலும், நம்மவர் முத்திரை பதிக்க வேண்டும். நாம் அனைத்து துறைகளுக்குமான உலகின் முன்னோடிகள் என்பதை மறந்து விடக்கூடாது.

பண்புள்ள இன்றையப் பொறுப்பாளர்களை, உருவாக்க வேண்டிய வருங்கால தலைவர்களை நாம் அடையாளம் காண வேண்டும். உலமாக்கள் இந்த சமுதாயத்திற்கு அதி அவசியம் போல உமராக்கள் எனும் தலைவர்கலும் அவசியமாகும். பொறாமை, எரிச்சல், புகழில்லாமல் சமுதாய நலனை நோக்கமாகக் கொண்டு தலைவர்களை உருவாக்க வேண்டும். நமது இளைஞர்கள் விஷயத்தில் நமக்கும் மிகுந்த பொறுப்பு இருக்கின்றது. அவர்களிடம் இருக்கும் திறமைகளை வெளிக்கொண்டு வர பெரியவர்கள் முயற்சிக்க வேண்டும். வயது முதிர்ந்து இறுதிவரை தலைமைத்துவத்தில் இருந்து அப்படியே இறந்துவிட வேண்டும் என்று எண்ணுவது பேதமையாகும். ஓய்வில்லாது போய்விடும், உங்கள் கண் முன்னே நிர்வாகத்தின் மிக்க நல்ல நீதியானப் பண்பு நிறைந்த இளைஞர்களை தலைவர்களாக உருவாக்கி பெருந்தன்மையுடன் விட்டுக் கொடுத்து விலகி நின்று அவ்வப்போது ஆலோசனை கூறி இளம் தலைவர்களை வழிநடத்த வேண்டும். என்னதான் இளைஞர்கள் ஜமாஅத் தலைவர்களாக வந்த அமர்ந்தாலும், முந்தைய தலைவர்கள், பெரியோர்களை மதித்து அவர்களிடம் ஆலோசனைக் கேட்டு அடக்கத்துடன் பணியாற்ற வேண்டும். பகைமை, வஞ்சகம், பொறாமை எதுவும் அறவே வந்திடக் கூடாது.

➢ சமுதாயத்தின் மூன்றாவது அங்கம் – பெரியோர்கள்

ولم يوقر كبيرنا فليس منا

**நமது பெரியவர்களை மதிக்காதவர்கள் நம்மைச் சார்ந்தவர்கள் அல்ல என்றார் நபி முகமது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்.**

பெரியவர்களைப் பட்டமரம் என்று ஒதுக்கி விடக்கூடாது, அவர்கள் பண்பட்ட மரம் அவர்களின் அறிவு அனுபவம் ஆலோசனைகளை புத்திசாலியான இளைஞர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். சமூகத்தின் மற்றும் ஒரு அங்கமான இந்த பெரியவர்கள் பரந்த மனதுடன் பெருந்தன்மையுடன் நடந்து கொள்ள வேண்டும். மேலும் சமூக அக்கறையுடன் காரியம் ஆற்ற வேண்டும். இளையதலைமுறையினருக்காக இறைவனிடம் இதய பூர்வமாக துவா செய்ய வேண்டும். இபாதத்துகளின் பெரும்பாலான நேரங்களைச் செலவிட வேண்டும். பெரியோர்களின் பிரார்த்தனை அல்லாஹ்வால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகும்.

➢ **சமுதாயத்தின் நான்காவது அங்கம் – பெண்கள்**

சமூகத்தின் நிறைவான நான்காவது அங்கம் பெண்கள் ஆவர். சமுதாயத்தின் கண்கள் என்று போற்றப்படும் பெண்களுக்கு இஸ்லாத்தின் உன்னதமான சிறப்புகள் தரப்பட்டுள்ளன. அவர்களுக்கு அவசியமான உரிமைகளும் நியாயமான சுதந்திரமும் வழங்கியுள்ளது. பெண்களின் இறையச்சமும், அடக்கமும், பணிவும், தர்ம சிந்தனையும் அவர்களை உயர்த்தும். குடும்பத்தில் கணவன், மாமனார், மாமியார் மற்றும் குடும்ப உறுப்பினர்களிடம் இனிமையுடனும், கண்ணியத்துடனும் நடந்து கொள்வதில் அவர்களின் சிறப்பு

இருக்கின்றது. மார்க்க உணர்வுள்ள நல்ல பெண் உலகின் உன்னதமான பொக்கிஷம் ஆகும்.

ஒரு பெண்ணின் கண்ணியம் இந்த சமுதாயத்தை தலை நிமிர செய்கிறது.

**وَلَا تَبَرَّجْنَ تَبَرُّجَ الْجَاهِلِيَّةِ**

“**அன்றையே அறியாமை காலத்துப் பெண்கள் தங்கள் அலகு அலங்காரத்தை வெளிக்காட்டி அலைந்து திரிந்தது போல் இஸ்லாமிய பெண்களே நீங்கள் அலையாதீர்கள்**” என்று எச்சரிக்கிறது அல்குர்ஆன்.

அந்நியர்களோடு அளவில்லா கலந்து பேசுதல், இன்ன பிற செயல்களால், சைத்தான்களின் சகல தீமைகளுக்கும் இலக்காகி வேலி தாண்டிய வெள்ளாடுகளாய் சில பெண்கள் சென்று விடுவதும் பெரும் அவலமாகும். அவர்களின் குடும்பத்திற்கும், உறவுக்கும் இந்த சமுதாயத்திற்கும் மிகுந்த தலைக் குனிவை ஏற்படுத்தும் பெண்கள் மிகுந்த கவனத்துடன் இருந்து வர வேண்டும்.

அல்லாஹ்வின் அருளால் முஸ்லிம்கள் சில கல்விக்கூடங்களை ஆங்காங்கு நடத்தி வருகின்றனர். இது வரவேற்கத்தக்கதாகும். இந்த சமுதாய மக்கள் இவற்றை மதித்து இவ்வாறான கல்விக்கூடங்களில் உங்களது பிள்ளைகள் கல்வி கற்க ஆவன செய்ய வேண்டும். இதனால் உங்கள் பிள்ளைகளின் தீன் மார்க்கம் பாதுகாக்கப்படும். மார்க்க அறிவும் பெருகும். உங்களுக்காக துஆ செய்யும் ஸலிஹான பிள்ளைகள் உருவாகுகிறார்கள்.

நமது கல்விக்கூடங்களின் பாடத்திட்டங்கள் நல்ல முறையில் பூரண அமைக்கப்பட வேண்டும். இதற்காக நம்மவர்களின் அறிவு, அனுபவம், ஆர்வம், சிந்தனையில் உள்ள திறமை மிக்க கல்வியாளர்களைக் கொண்ட குழுவினர்களை இனம் காண வேண்டும்.

எந்த மொழிக் கற்றாலும் நமது தந்தை தாய் மொழியான அமுதத் தமிழை மறந்துவிடக்கூடாது. நமது முன்னோர்கள் நம் தமிழ் மொழிக்காக ஆற்றியுள்ள இலக்கியப் பணிகள் ஏராளம் ஏராளம். **“இஸ்லாம் எங்கள் வழி இன்பத்தமிழ் எங்கள் மொழி”** எனும் உணர்வுடன் ஏராளமான இலக்கியங்களை படைத்துள்ளனர். இது உண்மையிலே நமக்கு பெருமை தான். ஆனால் இன்று நாம் என்ன செய்தோம்? சிந்திக்க வேண்டிய கேள்வி! ஆவணம் செய்ய வேண்டும்.

**إِنَّ اللَّهَ لَا يُغَيِّرُ مَا بِقَوْمٍ حَتَّىٰ يُغَيِّرُوا مَا بِأَنفُسِهِمْ**

நிச்சயமாக எந்த ஒரு சமுதாயம் தன்னைத்தானே மாற்றி நல்ல மாற்றத்திற்குள் கொண்டு வரவில்லையோ அந்த சமுதாயத்தை அல்லாஹ் நல்ல முன்னேற்றத்திற்கு ஒருபோதும் கொண்டு வர மாட்டான் இறைமறையின் அறிவிப்பு.

இனிய பெரு மக்களே! இந்த கல்வி கருத்தரங்கம் நல்ல பண்புகளையும் சிந்தனையும் தோற்றுவித்தால் அதுவே எங்களுக்கு பெரும் மகிழ்ச்சியாகும்.

நமது **அல் கலம் கல்விக்கூடம்** என்றென்றும் இந்த சமூகத்திற்கு நாட்டிற்கும் தனது பங்களிப்பைத் தொடர்ந்து செய்துக் கொண்டிருக்கும். உங்கள் அன்பான ஆதரவும், அன்பும் மிக அவசியம். மனிதநேயம் வேண்டும், இறைவனை வணங்கி மட்டும் அல்ல மற்ற சமய மக்களோடு இணங்கி போகின்ற அந்த பண்பாடு நமக்கு வேண்டும். இஸ்லாம் ஒரு அறிவார்ந்த மார்க்கம், ஒரு அழகிய மார்க்கம், மனிதகுலத்திற்க்காக வேண்டி அன்பு, அறிவு, மனிதநேய சிந்தனை தரவந்த மார்க்கம்.

**பேரன்பு மிக்க பெருமக்களே! அறிவு ஜீவிகளே! மார்க்க அக்கறை,சமூக அக்கறை, நிறைந்த சமுதாயத் தலைவர்களை சன்மார்க்க அறிஞர்களே! சகோதர சகோதரிகளே! சிறப்பு விருந்தினர்களே! சகல ஊர்களின் ஜமாத்தினர்களே! ஆசிரியர்களே! மாணவர்களே!**

எங்களின் அன்பான அழைப்பு ஏற்று, ஆர்வத்துடன் வருகைத் தந்து என் உரையைக் கவனத்துடன் கேட்டுக் கொண்டிருக்கும் சமுதாயத்தின் அங்கங்களே! உங்களை வாழ்த்தி வரவேற்கின்றேன்! எனது இந்த பேச்சு, நம் சமுதாய நிலை பற்றிய எனது கவலை! உலகில் பல சமுதாயங்கள் தங்களை நல்ல முறையில் மாற்றிக்கொண்டு, நல்ல தலைமையை உருவாக்கி, தலைமைக்கு கட்டுப்பட்டு, சிறந்த முன்னேற்றம் கண்டு வருகின்றனர். அனைத்திற்கும் காரணம் அவர்களின் உளப்பூர்வமான உண்மையான ஒற்றுமை தான்.

உலகில் சமூக ஒற்றுமை மனித குல ஒற்றுமை சமத்துவம் சமூகநீதியே, அன்றைய காலத்திலேயே அறிவுறுத்தி, வலியுறுத்திக் செயல்படுத்தி காட்டிய சத்திய மார்க்கம் இஸ்லாம் தான். ஏனெனில் இது இறைவனின் மார்க்கம், இறைமார்க்கத்தில் இதய பூர்வமாக ஏற்று வாழ்ந்தவர்கள், வாழ்பவர்களே முஸ்லிம்கள். ஒற்றுமைக்கு பெயர் பெற்றவர்கள், மனிதநேயமிக்கவர்கள், மக்களின் துயிர்களில் பங்கெடுத்துப் பல நிலைகளிலும் களம் இறங்கி உதவி செய்பவர்கள். மனிதர்களுக்கு பயன்நல்கும் நல்உதவி செய்பவர்களே, மனிதர்களில் சிறந்தவர்கள் என்று செம்ம நபியின் செயல் முறையை ஏற்று நடப்பவர். இறை அருள் பெற்ற எனது சமுதாயத்தினரே! எனது உரையை உங்கள் இதயத்தில் நிறைத்து நிறுந்துங்கள், சிந்தியுங்கள்!

اِنَّمَا الْمُؤْمِنُوْنَ اِخْوَةٌ

முஃமின்கள் எல்லாம் ஒரு தந்தை ஒரு தாய் பெற்றெடுத்த சகோதரிகள் என்ற குர்ஆனில் அறிவிப்பை உணருங்கள். சுய நலமில்லா நல்ல தலைவர்களை உருவாக்குங்கள், தலைமைக்கு கட்டுப்படுங்கள், பெரியவர்களை மதியுங்கள், பெண்களை கண்ணியப்படுத்துங்கள், சிறுவர்கள் மீது இறக்கம் காட்டுங்கள், தேவை உள்ளோர்களின் தேவைகளை இயன்ற வரை நிறைவேன்றுங்கள். மார்க்க அக்கறை, சமுகை அக்கறை கொள்ளுங்கள். உங்கள் குடும்பங்களின் கல்வியாலரை உருவாக்குங்கள். பொது காரியங்களின் ஆர்வத்துடன் பங்கேற்று நல்லதொரு பணிகளை ஆற்றுங்கள்.

எவர்கள் முஸ்லிம்களின் பொது பணியில் தம்மை ஈடு படுத்திக் கொள்ளவில்லையோ, அவன் முஸ்லிம்களைச் சார்ந்தவர் அல்ல என்று அறிவுறுத்திய அண்ணல் முஹம்மது (ஸல்) அறிவு மொழியை மனதில் நிறுத்துவோம்.

சமுதாயம் சமுதாயம் என்பது யாரோ சிலர் அல்லர். சிறுவர், இளைஞர், பெரியவர், பெண்கள் இவர்கள் அனைவரையும் கொண்டதுதான் சமுதாயம். இந்த ஒவ்வொருவரும் தம்தம் கடமை, பொறுப்பை உணர்ந்து பரந்த மனதுடன் திகழ்ந்து, தமக்கும் வீட்டிற்கும், சமூகத்திற்கும், நாட்டிற்கும் பயன் தரும் வகையில் நடந்தால் பொற்கால வரலாற்றை படைக்கலாம். இவ்வாறு வாழ அல்லாஹ் அருள் புரிவானாக! என்று துவா செய்து அமைதி காத்த உங்கள் அனைவருக்கும் நன்றி கூறி நிறைவு செய்கின்றேன்.

وآخر دعوانا أن الحمد لله رب العالمين

"அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரக்காத்துஹு"

السَّلَامُ عَلَيْكُم ورَحْمَةُ اللهِ وَبَرَكَاتُهُ



## Al Qalam International School [CBSE]

RAMNAD - RAMESHWARAM HIGHWAY, PERUNGULAM.
MOB : 63855 65678 | EMAIL : alqalamschoolpgm@gmail.com





**AL QALAM NURSERY & PRIMARY SCHOOL**

Periyapattinam - Ramanathapuram Dist,Tamilnadu.
Ph : 04567-252180
Email : alqalamschoolpgm@gmail.com



**Qalam International Matric.Hr.Sec School**

Sendrayanpalayam, Poondi,Thiruvallur - 602023
Mob : 80567 45629
Email : qalamischool@gmail.com



**Aleef School**

Maraikayar Street, Mannady, Chennai - 01
Tel : +91 44 4262 0759
Email : aleefschool.np@gmail.com

AUSTRALIAN INTERNATIONAL ISLAMIC COLLEGE









DURACK | CARRARA | BRISBANE | DARWIN | LOGAN | GOLD COST

**AL QALAM INTERNATIONAL SCHOOL - CBSE** (Affiliated to CBSE, New Delhi.)

Tel : 04573 299438 , Mob : 63855 65678

Web : aqis.qalamschools.org | www.qalamschools.org